# வலயக்கல்வி அலுவலகம் - தீவகம்

## முதலாம் தவணைப் பரீட்சை – 2018

தரம் 10 | விவசாயமும் உணவுத் தொழிநுட்பமும் | நேரம் – 3 மணித்தியாலம்

### பகுதி I

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) கலிங்கல் தொட்டியின் பிரதான தொழிலாக அமைவது
   1. மேலதிக நீரை வெளியேற்றல்
   2. நீரை வெளியேற்றல்
   3. அதிக அமுக்கத்துடன் நீரை வெளியேற்றும் போது அணைக்கட்டு பாதிப்படையாமல் தவிர்க்க
   4. அதிக அமுக்கத்துடன் நீரை வெளியேற்ற

2) பிரித்தானியரால் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்டப்பயிர்
   1. உருளைக்கிழங்கு 2. கறுவா 3. சிங்கோனா 4. லீக்ஸ்

3) அந்நியர் வருகையினால் விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றம் அல்லாதது
   1. அரிசி மற்றும் பிற உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன
   2. வட திசையை நோக்கி இராசதானி இடம்பெயர்ந்தமையால் நீர்பாசனத்திட்டம் கைவிடப்பட்டன
   3. தன்னிறைவுப் பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரமாக மாறியமை
   4. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது

4) விவசாயத் திணைக்களம் தொடர்பாக சரியான கூற்று
   1. 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது
   2. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்கவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது
   3. நலிவடைந்த உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது
   4. நெற் பயிர்ச்செய்கையை ஊக்கவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது

5) மொத்த தேசிய உற்பத்திக்கு அதிக பங்களிப்பு செய்யும் துறை யாது?
   1. விவசாயம் 2. கைத்தைாழில் 3. சேவை 4. கால்நடைவளர்ப்பு

6) வாழ்வின் எழுச்சி திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   1. 2015 2. 2014 3. 2012 4. 2011

7) இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பல்நோக்கு திட்டம்?
   1. கல்லோயா 2. மாவிலாறு 3. மகாவலி 4. கொத்மலை

8) ஒளிச்செறிவை அளக்கும் கருவியும் அலகும் பொருத்தமாக அமைவது
   1. ஞயிற்றுக் கதிர்ப்புமானி – லக்ஸ்
   2. சூரியக் கதிர்ப்புமானி – ஒளிர்வு மணித்தியாலம்
   3. ஞயிற்று ஒளிர்வுமானி – ஒளிர்வு மணித்தியாலம்
   4. சூரியக் கதிர்ப்புமானி – லக்ஸ்

9) தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை கிடைக்கும் காலப்பகுதி
   1. மார்ச் - ஏப்ரல் 2. மே – செப்ரெம்பர்
   3. ஒக்ரோபர் – நவம்பர் 4. டீசம்பர் – பெப்ரவரி

10) உகைப்பு மழை தொடர்பாக பிழையான கூற்று
   1. இவை இடைப்பருவ மழை எனவும் அழைக்கப்படும்
   2. மாலை வேளையில் இடியுடன் கூடியதாக இந்த மழை ஏற்படும்
   3. தரை சூடாகி உடன்காவுகையோட்டம் ஏற்படுவதால் இம் மழை தோன்றும்
   4. வளிமண்டல அமுக்க மாற்றங்களினால் இம்மழை உருவாகும்

11) சிறுபோகத்தில் விதைப்பு மற்றும் நாற்றுநடல் செய்யும் காலப்பகுதி
   1. ஒக்ரோபர் 15க்கு முதல் 2. ஏப்ரல் 15க்கு முதல்
   3. மார்ச் முற்பகுதி 4. பெப்ரவரி 15க்கு முதல்

12) பயிர்ச்செய்கையில் வெப்பநிலையின் செல்வாக்கு தொடர்பாக பிழையான கூற்று
1. வெப்பநிலை குறித்த அளவைவிட அதிகரிக்கும் போது ஒளித்தொகுப்பு குறைவடையும்
2. கரட்டில் பூக்கள் உருவாக குறைந்த வெப்பநிலை அவசியமன்று
3. வித்து முளைக்க சூழல் வெப்பநிலையை விட கூடிய வெப்பநிலை அவசியமன்று
4. வெப்பநிலையுடன் குறிப்பிட்ட மட்டம் வரை நீர் அகத்துறிஞ்சல் அதிகரிக்கும்

13) அதிக ஒளியை விரும்பும் தாவரக் கூட்டம்
1. மிளகாய், நெல், கோப்பி
2. மிளகாய், மிளகு, நெல்
3. மிளகாய், கொக்கோ, மிளகு
4. மிளகாய், கத்தரி, நெல்

14) கணுவிடை, வித்திலை மேற்தண்டு வளர்ச்சிக்கு உதவுவது
1. நீல ஒளி
2. கருநீல ஒளி
3. சிவப்பு ஒளி
4. நீல, சிவப்பு ஒளி

15) எதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை 3 காலநிலை வலயமாக பிரிக்கப்படுகின்றது
1. குத்துயரம்
2. மணல் அமைப்பு
3. மழைவீழ்ச்சி
4. குத்துயரம், மழைவீழ்ச்சி

16) IM என குறிக்கப்படுவது
1. மேல் நாட்டு இடைவலயம்
2. மத்திய நாட்டு ஈரவலயம்
3. தாழ் நாட்டு ஈரவலயம்
4. மத்திய நாட்டு இடை வலயம்

17) சாரீரப்பதனை அளவிடப் பயன்படுவது
1. ஈர உலர் குமிழ் வெப்பமானி
2. உயர்வு இழிவு வெப்பமானி
3. சிட்சின் உயர்வு இழிவு வெப்பமானி
4. வெப்பமானி

18) ஒரு குறித்த பிரதேசத்திற்கு கிடைக்கும் மழைவீழ்ச்சி 2750mmஉம் அப்பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 750mஇல் அமைந்துள்ளது அதன் விவசாயக் காலநிலை வலயம்
1. WM
2. WU
3. IU
4. IM

19) பின்வரும் பயிர்ச் செய்கையில் வளிமண்டலத்திற்கு மெதேன் வாயுவை அதிகளவில் வெளிவிடுவது
1. நெல்
2. கரும்பு
3. மகோகனி
4. மலைநாட்டு காய்கறி

20) விவசாயக் காலநிலை வலயங்கள் விவசாய சூழலியல் வலயங்களாக பிரிக்கப்படும் போது கருத்தில் கொள்ளப்படுவது
1. தரைத்தோற்ற வேறுபாடு, மண்வகை, நிலப்பயன்பாடு
2. தரைத்தோற்ற வேறுபாடு, மழைவீழ்ச்சி, நிலப்பயன்பாடு
3. தரைத்தோற்ற வேறுபாடு, மண்வகை, மழைவீழ்ச்சி
4. தரைத்தோற்ற வேறுபாடு, மழைவீழ்ச்சி, குத்துயரம்

21) பின்வரவனவற்றுள் தீப்பாறைக்கு உதாரணமாக அமைவது
1. ஷேல்
2. நைஸ்
3. மணற்கல்
4. பெக்மரைற்று

22) இலங்கையில் அதிகளவில் காணப்படும் பாறை வகை
1. கிரனைற்
2. நைஸ்
3. மாபிள்
4. சுண்ணாம்புக்கல்

23) மண் குறுக்கு வெட்டமைப்பில் சேதனப் பொருட்களை அதிகளவில் கொண்டது
1. கொள்ளும்படை
2. தாய்ப்பாறைப்பொருள்
3. கழுவியகற்றும் படை
4. தாய்ப்பாறை

24) 0.2 – 0.02mm விட்டமுடைய மண்துணிக்கைகள்
1. பரல்
2. பெருமணல்
3. மேன் மணல்
4. அடையல்

25) தாவரங்களினால் அகத்துறிஞ்சப்படக்கூடிய நீர்
1. மயிர்த்துளை நீர்
2. பருகுநீர்
3. புவியீர்ப்புநீர்
4.மயிர்த்துளை நீர், பருகு நீர்

26) மண்ணிலுள்ள நுண்துளை, பெருந்துளை நீரால் நிரம்பியுள்ள நிலை
1. வயற்கொள்ளளவு நிலை
2. நிரம்பல் நிலை
3. தற்காலிக வாடல் நிலை
4. நிரந்தர வாடல் நிலை

27) டொலமைற்று அல்லது பெல்ஸ்பார் அதிகம் கொண்ட மண்ணின் நிறம் யாது
1. கறுப்பு
2. கபிலம்
3. சாம்பல்
4. செந்நிறம்

28) மண் நிறத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி அல்லாதது
1. மண்ணிலுள்ள கனிப்பொருள் 2. கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவு
3. சேதனப்பொருட்களின் அளவு 4. நீர்வடிப்பு நிலைமை

29) மண்ணின் அமிலத்தன்மையை நீக்க பயன்படுத்த முடியாதது
1. ஜிப்சம் 2. சுண்ணாம்புத்தூள் 3. டொலமைற் 4.கல்சியம் காபனேற்

30) ஆற்றங்கரையை அண்டிய பிரதேசங்களில் காணப்படும் மண்
1. செங்கபில மண் 2. செம்மஞ்சட் பொட்சோல்
3. அலூவியல் மண் 4. மணல் மண்

31) மண்ணின் நிறத்தை துணிய பயன்படுத்தப்படுவது
1. பெனிற்றோ மீற்றர் 2. pH மீற்றர் 3. மன்சல் அட்டவணை 4. ரீபக்றோ மீற்றர்

32) சாய்வான நிலங்களில் பாய்ந்து செல்லும் நீருடன் மண்ணரித்துச் செல்லப்படுவது
1. சிதறலரிமானம் 2. பரப்பரிமானம் 3. ஓடுகாலரிமானம் 4. சிற்றோடையரிமானம்

33) இலங்கையில் காற்றினால் மண்ணரிப்பு நிகழும் மாதங்கள்
1. யூலை, ஆகஸ்ட் 2. ஆகஸ்ட், செப்ரெம்பர்
3. மார்ச், ஏப்ரல் 4. ஏப்ரல், மே

34) இலங்கையில் காணப்படும் மண் வகைகளின் பாகுபாடு
1. 12 2. 13 3. 14 4. 15

35) கற்றயன் மாற்றீட்டுக் கொள்ளளவின் அலகு
1. 100g மண்ணுக்கு சென்றிமோஸ் 2. 100g மண்ணுக்கு மில்லிச்சமவலு
3. 10g மண்ணுக்கு சென்றிமோஸ் 4. 1000g மண்ணுக்கு மில்லிச்சமவலு

36) மண் காரத்தன்மை அடைவதால் கிடைப்புத்தன்மை குறைவடையாத மூலகம்
1. Fe 2. Cu 3. Mn 4. P

37) மண்ணின் பௌதிக இயல்பு அல்லாதது
1. இழையமைப்பு 2. மண் ஆழம் 3. மண்ணிறம் 4. மண் தாக்கம்

38) பயிர்ச்செய்கைக்கு உகந்த மண்ணில் காணப்படவேண்டிய நீரின் சதவீதம்
1. 20% 2. 45% 3. 5% 4. 25%

39) களி மண்ணை பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக மாற்ற சேர்க்கக் கூடிய பதார்த்தம்
1. சுண்ணாம்பு 2. மணல்மண் 3. சேதனப்பொருள் 4. மரத்தூள்

40) நீரில் கலக்கிய மண் மாதிரியில் தொங்கல் நிலையில் காணப்படுவது
1. மணல் 2. பரல் 3.களி 4.அடையல்

(40 புள்ளிகள்)